# MAR IVANIOS COLLEGE (AUTONOMOUS)
# THIRUVANANTHAPURAM

**Reg. No. :…………………** **Name :………………….**

**First Semester B.Com. Degree Examination, November 2014**

**First Degree Programme under CBCSS**

**Additional Language: Tamil – I**

**AUTM111.3: Ikkaala Tamil**

Time: **3** Hours Max. Marks: **80**

## SECTION – A

*கீழ்வரும் அனைத்து வினாக்களுக்கும்* ***ஓரிரு*** *சொற்களில் அல்லது ஒரு வாக்கியத்தில் விடையளி.*

1. சுயசரிதம், வசனகவிதை இரண்டையும் முதன் முதலில் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் யார் ?
2. ‘உனக்கு நீயே ஒளியாக இரு’ யார் யாரிடம் கூறியது ?
3. சாகித்ய அகாடமி விருது பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் யார் ?
4. பவள மாலை எனும் சிறுகதையின் ஆசிரியர் யார் ?
5. தமிழின் முதல் பெண் காதல்கடித நூல் எது ?
6. வெங்கட்ரமணன் குறிப்பிடும் விடலைத் தொழில்நுட்பங்கள் இரண்டினை எழுதுக ?
7. ஐன்ஸ்டீனின் அறிவியல் கட்டுரைகளை மொழிப்பெயர்த்துத் தமிழுக்குத் தந்தவர் யார்?
8. “அத்திப் பூத்தாற்போல” எனும் பழமொழியை ஆங்கிலப்படுத்து.
9. வெண்ணிலா இணையாசிரியராகப் பணியாற்றிய இதழ் எது ?
10. குறைப் பிரசவம் – கவிதையின் ஆசிரியர் யார் ?

**(10 x 1 = 10 Marks)**

P.T.O.

## SECTION – B

*கீழ்வரும் வினாக்களில் எவையேனும் எட்டனுக்கு **ஒரு** பத்தி அளவில் விடை தருக.*

11. மொழிப்பெயர்ப்பாளனுக்கு இருக்கவேண்டிய அடிப்படைத் திறன்கள் யாவை ?
12. அறிவியல் தமிழில் மொழிப்பெயர்ப்புத் தேவை குறித்து எழுது.
13. கட்டுரை எனும் சொல் தமிழ் இலக்கியங்களில் பயின்று வருவதைக் கூறுக:-
14. பயணக் கட்டுரைகள் பற்றி எழுதுக ?
15. மரபுமாற்ற அறிவியலால் சூழல்பன்முகம் (ecodiversity) எவ்வாறு பாதிக்கப்படுகிறது ?
16. வெண்ணிலாவின் முதல் கவிதை பற்றி எழுதுக ?
17. ஜெயகாந்தன் குறிப்பு வரைக:
18. ‘மேரியின் ஆட்டுக்குட்டி’ எனும் சிறுகதையின் கதைக்கரு என்ன ?
19. பெண் சிறுகதை எழுத்தாளர்களில் இருவரைப் பற்றி எழுதுக ?
20. “பகைக்கஞ்சாத் தமிழ்” பற்றிப் பாரதிதாசன் குறிப்பிடுவது யாது ?
21. கவிமணி – ஆசிரியர் குறிப்பு வரைக:
22. பாரதியார் காற்றிற்கு எங்ஙனம் நல்வரவு கூறுகின்றார் ?

**(8 x 2 = 16 Marks)**

## SECTION – C

*பின்வரும் வினாக்களில் எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு 120 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.*

23. உறுபசி கட்டுரைக் கூறும் சிற்பங்களின் சிறப்புகளைக் கூறுக ?
24. கட்டுரையின் வரைவிலக்கணம் தருக:
25. புத்தரின் கடைசி அமுத மொழிகளாகச் சிற்பி கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக:-
26. தந்தை மகற்காற்றும் உதவி எது எனப் புவியரசு கருத்துரைக்கிறார் ?
27. சிறுகதையின் அமைப்பு எங்ஙனம் திகழ வேண்டும் ?
28. சுமைதாங்கி சிறுகதையின் போலீஸ்காரன் பாத்திரப்படைப்பை ஆராய்க ?

29. மொழிப்பெயர்ப்பில் தமிழ்மொழிக்கே உரிய சிக்கல்களை விவரி ?
30. மொழிப்பெயர்ப்பின் இன்றியமையாமையை விவரி ?
31. பின்வரும் ஆங்கிலப் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்.

Today's poetry is based on Modernism and post modernism. Poetry should be within the understanding of ordinary people. Post modern poetry recalls the classical poems. Poetry should be easily read and enjoyed without referring to a dictionary. Modern poetry cannot be understood without referring to a dictionary or encyclopedia.

**(6 x 4 = 24 Marks)**

## SECTION – D

*பின்வரும் வினாக்களுக்கு கட்டுரை வடிவில் எவையேனும் இரண்டிற்கு **மூன்று** பக்க அளவில் விடை தருக.*

32. இன்றைய சமுதாய மாற்றங்கள் புதுக்கவிதையில் உருவாக்கிய தாக்கங்களை நும் பாடப்பகுதி வழி நிறுவுக ?
33. மரபணு மாற்றப்பட்ட உணவுப் பொருள்கள் வரமா? சாபமா ? கட்டுரை வரைக.
34. 'ராஜா வந்திருக்கிறார்' மூலம் சிறுவர்களின் உலகம் எவ்வாறு காட்டப்படுகிறது ?
35. பின்வரும் தமிழ்ப் பகுதியை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்க்கவும்.

கல்வியின் நோக்கம் நம்மைத் தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றை நோக்கி அழைத்துச்செல்லும்படி இருக்க வேண்டும். நம்மை இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு வழி நடத்துவதாக நாம் பெறும் கல்வி இருக்க வேண்டும். நம்மிடம் இருக்கும் முனைப்பையும், ஆர்வத்தையும் மழுங்கடிக்கச் செய்கிற கல்வி நமக்குத் தேவையில்லை. நம்முடைய கல்வித் திட்டமும், தேர்வு முறையும் ஒவ்வொரு குழந்தையிடமும் ஒளிந்திருக்கும் தனித்தன்மையை வெளிக்கொண்டு வருகிற ஆழ்துளைக் கிணறாக இருக்க வேண்டும். மாறாக அது கசிவு நீர்க்குட்டையாக ஆகிவிடக்கூடாது.

**(2 x 15 = 30 Marks)**

⌠*⌠*⌠*⌠*⌠*⌠*⌠*⌠*⌠*⌠*⌠*⌠*⌠*⌠*⌠*